உ
சிவமயம்



பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் மகேஸ்வரி இராஜலிங்கம்

அவர்களின் ஞாபகார்த்த

# "நினைவு மலர்"

13.03.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# மகேஸ்வரி இராஜலிங்கம்

அவர்களின் ஞாபகார்த்த

# 'நினைவுமலர்"

**13.03.2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.02.2014 செவ்வாய்க்கிழமை சிவபதம் சேர்ந்த

**அமரர் மகேஸ்வரி இராஜலிங்கம்**

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்,

பாசத்தின் உறைவிடமாய், அன்பு நிறைந்தவராய்,

எமக்கு நல்வழிகாட்டி, எம்வாழ்விற்கு

ஒளிச்சுடராய், அனைவரிடமும் பாசத்துடனும்

நேசத்துடனும் இன்முகத்துடனும்

இவ்வையகத்துள் வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து

ஈசன் கழலடியைச் சேர்ந்த

எமது அன்னையின் திருப்பாதங்களில்

இம்மலரை காணிக்கையாக்குகின்றோம்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



உருவமாக
14-12-1948

ஒளியாக
11-02-2014

பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி மகேஸ்வரி இராஜலிங்கம்

அவர்களின்

## திதிநிறை வெண்பா

விஜய வருடத்துத் தைமாத
பூர்ப பக்க திருயோதசியில்
அமரர் ஈஸ்வரி சேர்ந்தாரே
ஈசன் கழலடிதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம் பிறை போலு மெயிற்றனை
நந்திமகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

பாடல் வீணையர் பலபல சரிதையர் எருதுகை தரு நட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்ட நஞ்சு உண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது இருங்கடற் கரையினில் எழில் திகழ் மாதோட்டம்
கேடிலாத கேதீச்சரம் தொழுதெழ கெடுமிடர் வினைதானே.

## திருவாசகம்

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

நாடித் தேடித் தொழுவார் பால்
ஞானத் தாக திரிவோனே
மாடற் கூடற் பதிஞான
வாழ்வைச் சேர தருள்வாயே
பாடற் காதற் புரிவோனே
பாலகத் தேனொத் தருள்வோனே
ஆடற் தோகை இனியோனே
ஆனைக் காவிர் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மகேஸ்வரி இராஜலிங்கம்

அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

நீர் வளமும், நிலவளமும் நிறைந்துள்ள நாடாம் நம் ஈழத் தனித்திருநாடு அதன் வடபுலத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் என்னும் நகரில் நீராவியடி என்னும் இடத்தில் தெய்வ பக்தியும், திருவருட் அறமும் வையகவாழ்வில் நிலைத்திட வாழ்ந்த சோமசுந்தரம் வாலாம்பிகை தம்பதியினரின் ஐந்தாவது புதல்வியாக 14.12.1948இல் மகேஸ்வரி அவர்கள் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் பிறந்தார்.

இவரின் சகோதரர்களாகிய காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சேதுபதி, கனகேஸ்வரி, சோதி, முருகையா, மகாதேவன், உமாதேவி, பரமேஸ்வரி, வெற்றிவேல் ஆகியோருடன் அன்பாகவும் பாசமாகவும் வளர்ந்து திருமண பந்தத்தில் மனதிற்கினிய கணவராக சங்கரப்பிள்ளை மீனாட்சி தம்பதியினரின் மகன் இராஜலிங்கத்தைக் கரம்பிடித்தார். இவர்களிற்கு விஜி, கண்ணன், ராஜி மற்றும் காலஞ் சென்ற சிறீகுமார் ஆகிய செல்வங்களைப் பெற்று அன்பாகவும் பாசமாகவும் வளர்த்து விஜியை ரவிச்சந்திரனிற்கும் கண்ணனை விஜிதாவிற்கும் ராஜியை சிற்சபேசனிற்கும் மணம்முடித்து வைத்தார்.

2008இல் அவரிற்கு கொடிய நோய் உண்டாகியது. இளைய சகோதரி தயாவுடன் யாழ்ப்பாணத்தில் இருந்துவிட்டு பிள்ளைகளின் அழைப்பிற்கிணங்க டென்மார்க் வந்தார். அங்கு பேரப்பிள்ளைகளான பிரதாப், பிரியா, ப்ரியந், ப்றீபன், அனிஷன் (டென்மார்க்), ருத்வி (கனடா), விதுர்ஷன், ரிஷியன்ந், சரண்ஜித் (ஜேர்மனி) இவர்களுடன் சந்தோஷமாக வாழ்ந்துவரும் வேளையில் நோயின் தாக்கத்தினால் 11.02.2014இல் எமைவிட்டு இறைவனடி எய்தினார். அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரி தயாவின் இரங்கல்

கடந்த 6 வருட காலமாக கொடிய நோயினால் வருந்தி சகல வேதனையையும், சோதனையையும் தாங்கி இறுதியில் 11.02.2014 அன்று காலமாகிவிட்ட என் அன்புச் சகோதரியே,

எம் வாழ்விற்கு விளக்கேற்றி வைத்த
எனதன்பு அக்காவே! எம்மை
வாழவைத்துவிட்டு வானம் சென்றது ஏனோ?
உறவு வரும், ஒரு நாள் பிரிவு வரும்
அந்தப் பிரிவிலிருந்து மீண்டும் உறவு சேரும்போது
ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.
நீ வரும் நாளை எதிர்பார்த்தோம்
மகிழ்ச்சியை பரிமாற ஆனால்,
இன்று அது நிரந்தரமாகப் போய்விட்டதே!
இனி எங்கே சந்திப்போம்
தாங்க முடியவில்லையே என்னால்
கண்ணீரில் மிதக்கின்றோமே இன்று

**திரு.திருமதி ப. தவராஜா**
**(தயா)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

தொல்லையிலும் பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம்தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்ஆகி பூடு ஆகி புழு வாய் மரம் ஆகி
பல் விருகம் ஆகி பறவை யாய் பாம்பு ஆகி
கல்லாய் மனிதர் ராய் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவர் ஆய் தேவர் ஆய்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்தி ளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய் தணியாய் இயமான நாம் விமலா
பொய் யாயின எல்லாம் போய கல வந்து அருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமாளே
அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே!
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்த தபால்கன்னலொடு நெய் கலந்தால் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓரைந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி
புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந் துள்ளுருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்!
தாயிற் சிறந்த தயா வான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே தேனாரமுதே சிவபுரனே!
பாசமாம் பற்று அறுத்து பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என்னாரியுராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானெ
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்தங்கருத்தின்
நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வு இல்லாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண் பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உன்னார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நடம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேவி கருமாரியம்மன் தோத்திரம்



பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்றும் மூவாமுகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே.

*கற்பூர நாயகியே! கனகவல்லி!*
*காளி மகமாயி! கருமாரியம்மா!*
*பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா!*
*பூவிருந்தவல்லி தெய்வானையம்மா!*

*விற்கோல வேதவல்லி! விசாலாட்சி!*
*விழிக்கோல மாமதுரை மீனாட்சி!*
*சொற்கோவில் நானமைத்தேன் இங்குதாயே!*
*சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே!*

*புவனமுழுதாளுகின்ற புவனேஸ்வரி!*
*புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி!*
*நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி!*
*நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி!*

*கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி!*
*காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி!*
*உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி!*
*உன்னடிமைச் சிறியேனை நீயாதரி!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன்! தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா!

கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா!
சின்னவளின் குரல்கேட்டு முகம் திருப்பு!
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு!

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்!
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்!
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்!

எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்!
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்!
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா!
மகனுடைய குறைகளை நீ தீருமம்மா!

நெற்றியினுள் குங்குமமே நிறையவேண்டும்
நெஞ்சினினுள் திருநாமம் வழியவேண்டும்!
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருகவேண்டும்!
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்!

சுற்றமெல்லாம் நீடூழி வாழவேண்டும்!
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்!
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா!

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ!
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ!
கண்ணுக்கு இமையன் றிக்காவலுண்டோ!
கன்றுக்கு பசுவன்றி சொந்தமுண்டோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ!
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ
எண்ணைக்கும் விளக்குக்கும் பேதமுண்டோ!
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ!

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்!
அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்!
வம்புக்கே போகாமலிருக்க வேண்டும்!
வஞ்சத்தை என் நெஞ்சம் அறுக்க வேண்டும்!

பண்புக்கே உயிர்வாழ ஆசைவேண்டும்!
பரிவுக்கே நானென்றும் பணியவேண்டும்!
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்!
என்னோடு நீ என்றும் வாழவேண்டும்!

கும்பிடவோ கையிரண்டும் போதவில்லை!
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை!
நம்பிடவோ மெய்யதனில் சக்தி இல்லை!
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை!

செம்பவள வாயழகி! உந்தனெழிலோ!
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை!
அம்பளவு விழியாளே! உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை!

காற்றாகி கனலாகிக் கடலாகினாய்!
கயிறாகி உயிராகி உடலாகினாய்!
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்!
நிலமாகிப் பயிராகி உணவாகினாய்!

தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்!
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்!
போற்றாத நாளில்லை தாயே உன்னை!
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் துணை

*ஓம் சரவணபவ! ஓம் சரவணபவ! ஓம் சரவணபவ!*

# கந்த சஷ்டி கவசம்



## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்
போம் நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் - கதித்(து) ஓங்கும் நிஷ்டையுங்
கைகூடும் நிமலனருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த குமரன்
அடி நெஞ்சே குறி.

*சஷ்டியை நோக்கச் சரவண பவனார்*
*சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்*
*பாதமிரண்டில் பண்மணிச் சதங்கை*
*கீதம் பாடக் கிண்கிணி யாட*
*மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்*
*கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து*
*வரவர வேலா யுதனார் வருக*
*வருக வருக மயிலோன் வருக*
*இந்திரன் முதலா எண்டிசை போற்ற*
*மந்திர வடிவேல் வருக வருக*
*வாசவன் மருகா வருக வருக*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர்குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈரறு செவியில் இலகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன் மணிபூண்ட நவரத்ன மாலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியானைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியும் வலிப்புப் பித்தம்
சூலையங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் ரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறனிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்க ருளுவர்
மாற்றவ ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரை பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஸ்ரீராம ஜெயம்

# நவக்கிரக வழிபாடு

## சூரியன்

*சீலமாய் வாழ சீரருள் புரியும்*
*ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி*
*சூரியா போற்றி சுந்தரா போற்றி*
*வீரியா போற்றி வினைகள் களைவாய்.*

## சந்திரன்

*எங்கள் குறைக ளெல்லாந் தீர்க்கும்*
*திங்களே போற்றி திருவருள் தருவாய்*
*சந்திரா போற்றி சத்குரு போற்றி*
*சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி.*

## செவ்வாய்

*சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே*
*குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ*
*மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி*
*அங்கா ரகனே அவதிகள் நீக்கு.*

## புதன்

*இதமுற வாழ இன்னல்கள் நீக்கு*
*புதபக வானே பொன்னடி போற்றி*
*பதந்தந் தாள்வாய் பண்ணொலி யானே*
*உதவியே யருளும் உத்தமா போற்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழன்

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பாகுரு நேசா
க்ரக தோஷமின்றிக் கடாக்ஷித் தருள்வாய்.

## வெள்ளி

சுக்ர மூர்த்தி சுபமிக யீவாய்
வக்ர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே.

## சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா.

## இராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி.

## கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்ற பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவ பக்தி

சிவபக்தி மாத்திரந்தான் மனிதனைப் பாக்கியவானாக்கும். மற்றையவனைத்தும் பிரயோசனமற்றவை. ஆகையால் இடைவிடாமற் சிவத்தியானம் பண்ணு. ஒன்றுக்கும் பயப் படாதே. வெற்றியுன் சொந்தம். எத்தனைமுறை தவறினாலுந் தைரியத்தைக் கைவிடாதே. தவறுதல் சட சம்பந்தமானது. நீயோ சித்துப்பொருள். (அதாவது அறிவுப் பொருள்) நீயொரு நாளும் அழியமாட்டாய். எழுந்திரு! விழித்துக்கொள்! காரியங்கைகூடுமட்டும் வழியிலே தங்கிவிடாதே! உற்சாகத் தோடு முன்னேறிச்செல். உனக்குள் சகல சக்தியுங் கட்டுப் படுவதைக் காண். வீண்வாத தர்க்கத்திலே நாளைப் போக்காதே, நீ எங்கே போகிறாயோ அங்கே உன்னுடன் பகவான் வருவார்.

வெளிமாதிரியொன்றுஞ் செய்யாதே. உனக்குள் நீ பெலத்துக்கொள். சமயமென்பது ஒரு மாதிரியுமற்ற தனித்த நிலை, உடல் பொருள் ஆவி மூன்றையும் பகவானுக்கு ஒப்படை. அதன்பின் உன்னைப் பற்றிய காரியங்களைக் கைவிட்டுவிடு. அனைத்தும் அவனே பார்.

**– யோகர் சுவாமிகள்.**

## இறைவனும் தண்ணீரும்

- தண்ணீர் மேலேயிருந்து கீழேவரும்.
  இறைவனும் தன் பரத்துவ நிலையிலிருந்து கீழேயிறங்கி தன்னை நாடும் பக்தர்களிடம் வருகிறான்.
- தண்ணீருக்கு ஏழை - பணக்காரன், தாழ்ந்தவன் - உயர்ந்தவன், ஆண் - பெண், சிறியவர் - பெரியவர் என்ற பேதம் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தண்ணீருக்கு நிறம் - மணம் கிடையாது
- அதுபோலவே இறைவனையும் இத்தகையவன் என்று அறுதியிட்டுச் சொல்லமுடியாது.
- அது போன்றே, அவரவர்களுடைய பக்தியின் அளவுக்குத் தகுந்தாற்போல் அருள்மழை பொழிவது இறைவனின் தன்மையாகும்.
- தண்ணீரில் எந்த நிறத்தைக் கலந்தாலும், அந்த நிறமாகவே அது மாறிவிடும்.
  அதுபோல் இறைவன் தான் எந்த அவதாரம் எடுக்கிறானோ, அதற்கேற்ப மாறிவிடுகிறான்.
- உணவைச் சமைக்க உதவும் நீரை உணவாகவும் கொள்வது போல், படைத்த இறைவனிடம் வேண்டுவதோடல்லாமல், அவனோடு இரண்டறக் கலந்து ஐக்கியமாக எண்ணும் பக்தனுக்கும் அருள்பவன் இறைவன்.
- தண்ணீர் உலகெங்கிலும் வியாபித்திருப்பது போன்று, இறைவனும் உலகெங்கிலும் வியாபித்திருக்கிறான்.

## அன்புக் கட்டளைகள்

- கடவுளின் பேராற்றல் மெல்லிய பூங்காற்றில் இருக்கிறது புயற்காற்றில் அல்ல.
  பிறர் குற்றங்களைக் கண்டு தண்டிக்கும்முன்
  உன்னிடமுள்ள பாரிய குற்றங்களைக் காண்.

- உன்னிடம் வேலை பார்த்தவனின் வியர்வை
- உலர்வதற்கு முன் அவன் கூலியைக் கொடு
  தாயைப் பார்த்து பெண்ணெடு
  தரத்தைப் பார்த்து முதலிடு
  நிலத்தைப் பார்த்து பயிரிடு
- சாவில் பல ஒன்றாகும். வாழ்வில் ஒன்று பலவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் நாம் செய்யும் வேலை தான்
நமக்கு உற்ற தோழன்.

- ✧ பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யா விட்டாலும் தீமையாவது செய்யாது இரு. சுகத்தைக் கண்டு மகிழாதே அது துக்கத்தின் ஓர் வித அலங்காரம்
- ✧ துன்பங்களை உன்னிடம் குடி வைக்காதே அது உன்னை இறுதியில் அழித்துவிடும். கோபப் பாம்பு குழலுக்கு அடங்கும் கொதிக்கும் நெஞ்சை குளிர்மொழி அணைக்கும்
- ✧ கடனோடு காலையில் எழுவதைவிட பட்டினியோடு இரவில் படுப்பதுமேல் எழுந்திரு! விழித்திரு! கருதிய கருமம் கைகூடும் வரை உழைத்திடு!
- ✧ தன் பங்கு தாவென்ற தம்பியும், தம்பியோடு இன்புற்று வாழாத் தமையனும், வல்லாண்மை பேசும் மனையாளும் இம் மூன்றும் சொல்லாமல் வந்த கூற்றுவன்.
- ✧ அவசர புத்தியும் அடக்கா முன்கோபம் அன்பின் பலனைக் கெடுக்கும். சாந்தமும் சற்குணமும் சதா பலனைக் கொடுக்கும்.
- ✧ முதலில் அமைதியுடன் இருந்துவிட்டுப் பிறகு காரியம் வரும்போது பதறுவதைவிட பதற்றமாக இருந்துவிட்டு காரியத்தின்போது அமைதியாக இருப்பதே மேல்.
- ✧ அதிகாலையில் எழுந்திருந்தல், தேகத்தை திடப்பட வைத்துக் கொள்ளல், நன்றாக உழைத்தல், எளிய வாழ்வு வாழ்தல், கஷ்டத்தைப் பொறுமையுடன் சமாளித்தல், வாழ்க்கையில் வெற்றி தரும்.
- ✧ எவன் தனக்கு சம்பந்தமற்றதாயும் உனக்கு இரகசியமாய் உள்ளதுமான விஷயத்தை கூர்மையாய் விசாரிக்கிறானோ அவன் விஷயத்தில் கவனமாயிரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



அன்பிற்கு உறைவிடமாய் இருந்து எங்களுக்கு வழிகாட்டியாய் திகழ்ந்த எமது குடும்பத் தலைவி **அமரர் மகேஸ்வரி இராஜலிங்கம்** அவர்கள் ***11.02.2014*** செவ்வாய்க்கிழமை அன்று இறையடி சேர்ந்த செய்தியை அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியவர்கள், தொலைபேசிகள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது நன்றிகள். அத்துடன் அவரின் அந்தியேட்டிக்கிரியை (டென்மார்க்கில் ***13.03.2014***) அன்று நடைபெறும். அன்றைய தினம் சகோதரியான எமது இல்லத்தில் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனைசெய்து மதியபோசனம் நிகழ்த்த இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். மற்றும் இம்மலரை அழகுற அச்சிட்டுத் தந்த அன்றா நிறுவனத்தினருக்கும் எமது உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஈஸ்வரி இல்லம்**
**25/6, 1ம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**




**- குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி மகேஸ்வரி இ…

# வம்சா…

★ சங்கரப்பிள்ளை

\+

★ மீனாட்சி

↓

★ இராஜலிங்கம்

↓

விஜயசரோஜா (டென்மார்க்)

\+

ரவிச்சந்திரன்

↓

பிரதாப்
பிரியா
பிரியந்
பிறீபன்
அனீஸ்

ராஜ்குமார் (கனடா)

\+

விஜிதா

↓

றுத்வி

ரஜனி (ஜேர்ம…

\+

சிற்சபேசன்…

↓

விதுர்ஷன்
ரிஷியன்ந்…
ஷரண்ஜித்…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி இராஜலிங்கம் அவர்களின்

# ரசா வழி

★ சோமசுந்தரம்
+
★ வாலாம்பிகை
↓
★ கமலாதேவி
சேதுபதி
கனகேஸ்வரி
சோதி
மகேஸ்வரி
முருகையா
மகாதேவன்
உமாதேவி
பரமேஸ்வரி
வெற்றிவேல்

(ஜேர்மனி) ★ ஸ்ரீக்குமார்
+
சபேசன்
↓
துர்ஷன்
ஷியன்ந்
ரண்ஜித்

★ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்? அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்."
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்.

**- பகவான்**
**ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org